## அனைத்து பொது போக்குவரத்துகளையும் இணைக்கும் வகையில்

# ஒரே டிக்கெட்டில் பயணம் செய்யும் ‘சென்னை ஒன்’ செயலி திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, செப்.21-**

**சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் (CUMTA) சார்பில் இந்தியாவிலேயே முதன்முறையாக பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் மற்றும் கேப் / ஆட்டோக்கள் போன்ற அனைத்து பொது போக்குவரத்துகளையும் இணைக்கும் வகையில் ஒரே QR பயணச்சீட்டு மூலம் ஐ.ஓ.எஸ் மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக் கூடிய “சென்னை ஒன்று மொபைல் செயலி” யை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நாளை (22.9.2025) தொடங்கி வைக்கிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் (CUMTA) 2வது ஆணையக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சென்னைப் பெருநகரப் பகுதிக்கான 25 ஆண்டுகளுக்கான போக்குவரத்து திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதுடன் சென்னை பெருநகருக்கான ஒருங்கிணைந்த QR (Quick Response) பயணச்சீட்டு மற்றும் பயணத் திட்டமிடல் செயலியை 22.9.2025 அன்று தொடங்கி வைக்கவுள்ளார்.

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான (5,904 சதுர கி.மீ) விரிவான போக்குவரத்து திட்டம் (Comprehensive Mobility Plan) 2023-2048, “மக்களும் பொருட்களும் தங்கு தடையின்றி ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதை உறுதி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த, நிலையான, பாதுகாப்பான மற்றும் நெகிழ்வான போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை ஏற்படுத்துதல்” என்ற தொலைநோக்குப் பார்வையுடன், நகர்ப்புற போக்குவரத்து முயற்சிகளை முன்னெடுத்து செல்வதற்காக அமைகிறது.

விரிவான போக்குவரத்து திட்டம் மூலம் பயண நேரத்தை மற்றும் பயண செலவைக் குறைத்தல், நம்பகமான, விரைவான பொதுப் போக்குவரத்தை வழங்குதல், பல்வகை பொது போக்குவரத்தை ஒருங்கிணைத்து வலுப்படுத்துதல், குறைந்த போக்குவரத்து உமிழ்வு மற்றும் பயணத் தேவை மேலாண்மையை ஊக்குவித்தல் போன்றவை கண்காணிக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து பொது போக்குவரத்தையும் இணைக்கும் வகையில் ஐ.ஓ.எஸ் மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக்கூடிய “சென்னை ஒன்று (CHENNAI ONE) மொபைல் செயலியை” முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை (22.9.2025) தொடங்கி வைக்கிறார்.

இந்த செயலி பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் மற்றும் கேப் / ஆட்டோக்களை ஒரே QR பயணச்சீட்டு மூலம் ஒருங்கிணைக்கிறது.

இதன்மூலம் பொதுமக்கள் பேருந்துகள், மெட்ரோ மற்றும் புறநகர் ரயில்களின் நிகழ்நேர இயக்கத்தை அறிந்து கொள்ளவும், UPI அல்லது கட்டண அட்டைகள் வழியாக பயணச் சீட்டுகளை பெற்றிடவும்,

ஒரே பயணப் பதிவின் மூலம் அனைத்து போக்குவரத்து முறைகளிலும் பயணம் செய்யவும் முடியும். இச்செயலி ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் மக்கள் பயன்படுத்திடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

“சென்னை ஒன்று செயலி” பொது போக்குவரத்து சேவையில் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும். இனி பொதுமக்கள் பயணச் சீட்டு பெற வரிசையில் காத்திருக்க தேவையில்லை. இந்த செயலி மூலம் எளிதாக கட்டணம் செலுத்தி பயணச்சீட்டை பெற்று பயணம் செய்யலாம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கா.சோ.கா. கண்ணன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

## ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்புக் கூட்டம்! மயிலை கிழக்கு பகுதிக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை!

*சென்னை, செப். 21-*

இது குறித்து பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மயிலை கிழக்குப் பகுதியில் நடைபெறும் ‘தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டேன்!’ ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு கூட்டம் இன்று (21.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் சிலோட்டர் புரம், மயிலாப்பூர், சென்னை - 04 என்ற முகவரியல் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் - மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி - மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி எம்.சி., - தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே. ஏழுமலை எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆ. சந்திரசேகர், நந்தனம் வேதா, மு. சத்யா, கே. மலர், என். அன்பழகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் - தென்சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராய நகர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

மயிலை கிழக்குப் பகுதி கழகத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செய லாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகத்தின் நிர்வாகிகள் பாகப் பொறுப்பாளர்கள்

BLA2, BDA, BLC அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி அறிக்கை விடுத்துள்ளார்.




ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு மாபெரும் கூட்டத்திற்கு

சிறப்புரையாற்ற வருகை தரும்

மாண்புமிகு. டாக்டர். **பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்**

தகவல் தொழில் நுட்பவியல் (ம) டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர், சொத்துப் பாதுகாப்புக்குழு செயலாளர்

மாண்புமிகு. **மா.சுப்பிரமணியன்** B.A., LLB.,

மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்

மற்றும் மாவட்ட கழக, தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்.

வேளச்சேரி **வே.ஆனந்தம்** B.A., M.C.
பகுதி பொறுப்பாளர், 176-வது வார்டு மாமன்ற உறுப்பினர்

**வேளச்சேரி மேற்கு பகுதி தி.மு.க**